[1972 சனவரி 28

Research in Indian Medicine

* 68 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Central Council for Research in Indian Medicine and Homoeopathy, is opening Research Centres in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) புதுடெல்லியிலுள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு கீழ்க்கண்ட ஆய்வு அலகுகளை—பகுதிகளை—தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு ஒப்பளித்திருக்கிறது :—

(i) சித்த மருத்துவ முறையில் பிணி நீக்கும் பரிகார ஆய்வு கூடம், அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை, சென்னை ;

(ii) சித்த முறை மூலிகைகளைத் தரப்படுத்தும் கூடம் காப்டன் சீனிவாசமூர்த்தி ரிசர்ச் இன்ஸ்டிடியூட், சென்னை, அடையாற்றில் அது இயங்குகிறது ;

(iii) சித்த நூல் ஆராய்ச்சி கூடம், இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை;

(iv) மூலிகை வளர்ப்பு கூடம், அரசு இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை ;

திரு. கே. எ. வகாப் : இந்த மருத்துவ ஆராய்ச்சி முறையிலே யூனானி மருத்துவத்திற்கும் அப்படி ஏற்படுத்தும் குறிப்பு அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, யூனானிக்கு இப்போது அப்படிப்பட்ட ஆராய்ச்சிக்கு தனி வாய்ப்பு அளிக்கிற குறிப்பு இல்லை. ஆயுர்வேதத்திற்கும் அப்படித் தனியாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. தமிழகத்தில் சித்த வைத்தியத்திற்கு என்று நாம் செய்யாவிட்டால்—இந்த சித்த வைத்திய முறையினால் பலர் பிழைத்துக்கொள்வது இருக்கட்டும்—இந்த சித்த வைத்திய முறையே உயிர் பிழைக்காது என்ற காரணத்தினால்—சித்த வைத்தியத்திற்கான ஆராய்ச்சிகள் இங்கே நடக்கின்றன. ஆகவே, பிற பிரிவுகளுக்கு வசதியில்லை. ஆயினும், ஆயுர்வேதம், யூனானி ஆகியவற்றில் அக்கறை உள்ளவர்கள்—ஒவ்வொரு பகுதிக்கும் 5 லட்சம் நன்கொடை சேர்த்துத்தந்தால் அவற்றையும் சென்னையில் ஏற்படுத்தலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சித்த வைத்தியம் தமிழகத்தில் 4 சென்டரிலே இருந்து வருகிறதே—இதற்கு மத்திய அரசு எவ்வளவு மானியம் கொடுக்கிறார்கள் ? ஜோத்பூர் மத்திய கல்லூரிக்கு தமிழ்நாட்டில் இருந்து நல்ல தகுதிபெற்ற ஒருவர் அனுப்பப்பட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

1972 சனவரி 28]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வடக்கே அமைக்கப்பட்டிருக்கிற ஒரு பெரிய இந்திய மருத்துவப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சித்த மருத்துவ நிபுணர்கள் சென்று ஆராய்ச்சி நடத்திவருகிறார்கள். ஆனால், சித்த மருத்துவம் சிறப்பான நிலைக்கு வருவதை அங்குள்ளவர்கள் விரும்பவில்லை—முன்பு இருந்த சலுகைகள், வாய்ப்புகள் எல்லாம் குறைந்து வருகின்றன என்பதாக அங்குள்ள டாக்டர் ரமணன் தெரிவிக்கிறார். அவரைக் கூட இங்கே ஏதாவது ஒரு துறைக்குத் தலைவராக அழைத்துக் கொண்டுவிடலாமோ என்கிற எண்ணம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நான்கு சென்டரிலே ஆராய்ச்சிக்காக மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கிவருகிறது. அந்தப் பணம் அதற்காகவே இங்கு செலவிடப்படுகிறது. சென்னையில் அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ மனையில் 'ரிசர்ச் என்க்குவயரி இன் யூனானி' பிரிவில் பத்து படுக்கைகளும், ஆயுர்வேதப் பிரிவில் 10 படுக்கைகளும்—அதற்குரிய டாக்டர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது இந்திய மருத்துவக் கழகத்தின் உதவியோடு செய்யப்படுகிறது.

திரு. எஸ். வடிவேலு : தலைவர் அவர்களே, கோவில் தர்மஸ்தாபனங்களின் சார்பாக தமிழகத்தில் எத்தனை சித்த வைத்திய மருந்தகங்கள் நடத்தப்படுகின்றன? அவற்றிற்கு அரசின் பண உதவி ஏதாவது அளிக்கப்படுகிறதா? அதில் ஏதாவது குறைபாடுகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அண்மையில்தான் அந்த முயற்சி நிறைவேற்ற தொடங்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் 14 திருக்கோவில்களில் சித்த வைத்திய மருந்தகங்கள் ஏற்படுத்தப்பட்டு, பி.ஐ.எம். பட்டம் பெற்ற டாக்டர்கள் அவற்றை நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஏற்கெனவே இவை தொடங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் சில திருக்கோவில்களில் இம்மாதிரியான மருந்தகங்களை நடத்த முன் வந்திருக்கிறார்கள். இவற்றுக்கு அரசு நேரடியாக உதவவில்லை. அந்த அந்த வட்டாரத்திலுள்ள மக்களும் உதவி செய்கிறார்கள். திருக்கோவில்களின் சார்பாக நடத்தப்பெறும் இந்தப் பணி இந்தத் துறையின் மூலமாக நடைபெற வேண்டுமென்று அரசாங்கம் விரும்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

Primary Health Centres

* 63 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to convert Primary Health Centres in the State as Rural Hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

* 70 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டும் வேலை தொடங்கப்பட்டுள்ளதா?